# சைவசமய கோட்பாடுகளும் ஆலய வழிபாடும்

ஆக்கியோன்:

வி. செல்வரத்தினம் J. P.

(அகில இலங்கை சமாதான நீதவான்)

தலைவர்

பரிபாலன சபை

அராலி வண்ணப்புரம்

ஸ்ரீ விசாலாஷி அம்பாள் சமேத

விஸ்வ நாதேஸ்வரர் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:

**திரு. பத்மகுமரன்**

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

*எனது அடுத்த வெளியீடுகள்:*

முருகனின் ஆறுபடை வீடுகள்
காசியில் மூன்று நாள்
பரமசிவனின் குரல்

திருப்பணி விலை 30/- ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வட்டுக்கோட்டை திருமுறை மன்றச் செயலாளர்*

## சைவமணி சி. மருதபிள்ளை

அவர்கள் அளித்த

# அணிந்துரை

வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலி சிவன்கோயில் பரிபாலன சபைத் தலைவர் திருவாளர் வி. செல்வரத்தினம் அவர்கள் சைவம் தழைக்க வழிவகை செய்த நாவலர் பெருமானின் புனித வழியில் நின்று பணிபுரியும் பெருந் தொண்டராக விளங்குகின்றார்.

அவர் சிறந்த ஞானச் செல்வராக இருந்து நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் முதுமொழிக்கிணங்கச் சிறந்த சிவஞான நூலககளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இப்போது' ''சைவசமய கோட்பாடுகளும ஆலய வழிபாடும்'' என்னும் அரிய பெரிய பொருளைச் சிறப்பாகவும் சுருக்கமாகவும் எழுதிய நூலை வெளியிடுகிறார். நாம் எல்லோரும் இந்நூலை வரவேற்று, ஒருகை நூலாக வைத்திருந்து படித்தும் போற்றியும் பேரின்பம் அடைவோமாக!

*மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.*

சி. மருதபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாய கெட நிற்க வானந்த மாமே.

ஆம்! சிவாலயங்கள் அனைத்தும் தொன்மையானது அவற்றை சீரான நிலையில் வைத்து பேணுவது தலையான கடமையாகும். ஆலய பணிகளில் ஈடுபடுவது ஆன்மீகம் வளரும் ஆலயத்தின் பெருமை அளவிட முடியாது

என் உள்ளத்தில் அன்றும் இன்றும் என்றும் நின்று நிலைத்திருந்து வழிகாட்டும் சிவபெருமானை எழுத்தால் வணங்க வேண்டும். என்ற பற்றின் வெளிப்பாடே. இச்சிறு நூல் வெளிவருகிறது. (இது எனது இரண்டாவது நூலாகும்) இந் நூலை 60 பக்கங்களில் வரக்கூடியதாக எழுதியிருந்தேன் ஆனால் திடீரென அச்சடிக்கும் காகித தாளின் விலை 5 மடங்காக விலை உயர்ந்து அதன் காரணமாக நானும் புத்தகத்தின் பக்கத்தை 16பங்கங்களாக சுருக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. ஆகவே அமைப்பில் சில மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டது. ஆகவே அமைப்பில் சில தொடர்புகள் சீராக இல்லாமல் இருக்கும் இந்நூல் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் யாவும் ஆலயத் திருப்பணிக்கு சேர்க்கப்படும்.

மேலும் இந்நூலை மனம் உவந்து ஏற்று தனது செலவில் நூலாக்கி தந்த சைவமகன் இளஞ்சைவத்தம்பி திரு பத்மகுமரன் (யோகாபிடவை அகம்) அவர்களுக்கு எனது' பணிவான நன்றி' அவர்கள் நீடினிது வாழ்க. அவரின் சைவத் தொண்டு மேன்மேல் வளர்க வெல்க. எங்கள் அருள்மிகு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன். அடுத்தபடியாக இச் சிறு நூலுக்கு அணிந்துரை வழங்கிய சைவப் பெரியார் திரு. சி. மருதப்பிள்ளை அவர்களுக்கு எனது பணிவான நன்றி. மேலும் இந்நூலை அழகுடன் அச்சேர்த்தித் தந்த சரவணாஸ் அச்சகத்தாருக்கும் எனது பணிவான நன்றி, குறை நிறைகளை எழுதியனுப்பி வழிகாட்டுமாறு சைவ பெரியார்களிடம் வேண்டி மெய்யன்பர்களின் திருக்கரங்களில் இந் நூலை சமர்ப்பிக்கின்றேன்

நன்றி

அப்புக்காத்து வளவு,
அராலி மேற்கு
வட்டுக்கோட்டை.
23 - 6 - 98

வி. செல்வரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய கோட்பாடுகளும் ஆலயவழிபாடும்

## விநாயகர் வணக்கம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

சிவபெருமானை மூலவராக கொண்ட சைவ சமயத்தை சேர்ந்த நாம் அனைவரும் நாள் தோறும் ஆலயத்திற்கு சென்று பக்தியுடன் அன்புடன் மன அமைதியுடன் இறைவனை தரிசனம் செய்வது மிக மிக இன்றியமையாதது ஆகும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" இது ஔவையார் வாக்கு. "ஆலயம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்." இது ஆன்றோர் சொன்ன வாக்கு. ஆகவே ஆலயம் கிராமத்துக்கு மிக அவசியமானது.

இறைவனை ஆலயத்திற்கு சென்றுதான் வணங்க வேண்டுமா? ஏன் வீட்டில் உள்ள பூசை அறையில் வணங்கினால் போதாதா இப்படிபட்ட பல வினாக்கள் எமது மனதில் ஏற்படுவது இயல்பு. இதற்கு அருள்மகான்களும், ஆன்றோர்களும் எத்தனை எத்தனை தத்துவ விளக்கங்களை தந்து இருக்கிறார்கள். உதாரணமாக பசுவின் மேனியெங்கும் பால் சுரந்திருப்பினும் அதன் மடிமூலம் தான் நாம் பாலைக் கறந்து கொள்கிறோம். அதுபோல் எங்கும் நிறைந்த இறைவனின் அருளை நாம் பெறுதற்கேற்ப ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஆலயத்துக்கு சென்று தொழலே சாலச்சிறந்தது. இது ஓர் அருள் விளக்கம்

மற்றும் மிக கூடிய வெப்பத்தில் உள்ள வெய்யிலில் பஞ்சை வைத்தால் அங்கு நெருப்பு பஞ்சில் உண்டாகாது. ஆனால் சூரிய காந்தக் கண்ணாடியைக் கொண்டு வெய்யிலில் வெப்ப கதிர்களைக் குவித்து பஞ்சின் மேல் பிடித்தால் பஞ்சு உடனே எரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பயில் எல்லா இடங்களில் இருப்பது போலே இறைவன் எல்லா இடங்களிலும் வீற்றிருந்தாலும், இறைவன் மந்திர யந்திரத்துடன் பிரதிஷ்டை செய்த ஆலயத்தில் தான் விளங்கி தோன்றுகிறார். இது ஓர் அருள் விளக்கம்.

திருக்கோயில் வழிபாடு ஆற்றவேண்டிய முறையையும் தொண்டினையும் அப்பர் பெருமான் தன் தாண்டகத்தில் கூறுகிறார்.

''நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவிர்
நித்தலும் எம்பெருமான் கோயில்புக்கும்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா என்றேன்றே அலறா நில்லே''

எனவே சைவ பெருமக்கள் அனைவரும் திருக் கூட்டமாக ஆலயத்திற்கு சென்று இறைவனை வணங்க வேண்டும்.

ஒரு மனிதர் நிற்கும் நிலையோ அல்லது உட்கார்ந்திருக்கும் நிலையோ தான் கோவில் அமைப்பின் அடித்தளமாகும்.

| மனித உடலமைப்பும் | | கோயில் அமைப்பும் |
|---|---|---|
| தலை | — | கர்ப்பககிரகம் |
| கழுத்து | — | அர்த்த மண்டபம் |
| மார்பு | — | மகா மண்டபம் |
| வயிறு | — | ஸ்தப்ப மண்டபம் |
| தொடை | — | சபா மண்டபம் |
| முழங்கால் | — | முதல் வாசல் |
| கால்கள் | — | கல்யாண மண்டபம் அல்லது உற்சவ மண்டபம் |
| பாதங்கள் | — | கோபுர வாசல் |

ஆகவே மனிதனின் சரீரத்தினுள் தெய்வம் எழுந்தருளியிருக்கிறார் என்பது ஆன்றோர்களால் ஏற்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதற்கு அரியது இம்மானுடப்பிறவி. இப்பிறவியின் பயன் இறைவனைத் தொழுதலே

அரிதரிது மானிடராகப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது இறைவனைத் தொழுதல் என்பது ஆன்றோர்வாக்கு

எமக்கு விரும்பியபடி ஆலயங்களை அமைக்கக்கூடாது. ஆகமங்கள் விதித்துள்ளபடியே அவற்றை அமைக்க வேண்டும். என்பது கோட்பாடு.

# சிவாலய வழிபாடு

ஆலயத்திற்கு செல்லும் முன் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடையை அணிந்து நெற்றியில் திருநீறு அணிந்து அனுட்டானமும் ஜெபமும் முடித்துக் கொண்டு போகுதல் வேண்டும். திருக்கோயிலுக்கு செல்லும் பொழுது நம்மால் இயன்றளவு தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை கற்பூரம் மலர் முதலியவற்றை எடுத்து செல்லவேண்டும். எடுத்துக் செல்லும்கால் அதனை நம் இடுப்பிற்குக் கீழே தொங்க விடாமல் மேலே உயர்த்தி வலக்கையில் ஏந்திச் செல்ல வேண்டும். ஆலயத்திற்கு சென்றதும் முதலில் கால்கழுவி கோபுரத்தை வணங்கி உள்ளே செல்ல வேண்டும். பின் பலிபீடத்திற்கு இப்பால் ஆண்கள் வடக்கே தலை வைத்து அட்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும் அதாவது தலை, கையிரண்டு செவியிரண்டு, வாய் புயங்கள் இரண்டு ஆகிய நிலத்தில் படியும்படி நமஸ்காரம் செய்ய வேண்டும். பெண்கள் வடக்கே தலை வைத்து பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும் அதாவது தலை, கையிரண்டு இரண்டுமுழந்தாழ் ஆகிய நிலத்தில் படும்படி வணங்க வேண்டும். இங்கே விழ்ந்து வணங்குவதனால் தனது கீழான இயல்புகள் எல்லாம் அந்த இடத்தில் பலி கொடுக்கப்படுகின்றன.

பின் வீதி வலம் வர வேண்டும். வலம் வரும்போது சிரசிலாவது மார்பிலாவது இரு கரங்களையும் குவித்துக் கொண்டு இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு மெல்ல அடி யெடுத்து வைத்து நடத்தல் வேண்டும். முதலில் விக்கினேஸ்வரனை வணங்க வேண்டும். வணங்கும் போது, கைகளை மாறி பிடித்துக் கொண்டு நெற்றியில் மும்முறை குட்டி வலக் காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் மாறிப் பிடித்து மும்முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) வணங்க வேண்டும். பின் விநாயகருக்கு துதிப்பாடல் பாட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து!

இதே போன்ற விநாயக பாடல்களை பாடலாம்.

*பின் நந்தி தேவரை வணங்க வேண்டும். அதன் பின் மூலவ மூர்த்தி யாகிய சிவபெருமானை வணங்க வேண்டும்.*

*தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்*
*ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த வருள் செய்த*
*பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.*

திருஞானசம்பந்தர்.

*அன்றே என்றன் ஆவியும்*
*உடலும் உடைமை எல்லாமும்*
*குன்றே அனையாய் என்னையாட்*
*கொண்ட போதே கொண்டிலையோ.*
*இன்றோர் இடையூ றெனக் குண்டோ.*
*எண்டோள் முக்கண் எம்மானே*
*நன்றே செய்வாய் பிழை செய்வாய்*
நானோ இதற்கு நாயகமே

(மாணிக்கவாசகர்)

இதே போன்ற பாடல்களைப்பாடவேண்டும்.

அதன் பிறகு உமா தேவியாரை வழிபட வேண்டும்.

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கபுணியகுப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்புமிள நகை போற்றி ஆரணது
பரஞ்சிலம்பும் அடிகள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசாப் பெருமானை வணங்குதல் பின் அங்கே பாட வேண்டும்.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

மானாட மழுவாட மதியாடப் புனலாட மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திறையாட மறை தந்த பிரமனாட
கோனாட வானுலகுக் கூட்டமெல்லாமாட குஞ்சர முகத்தனாட
குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாடக் குழந்தைமுருகேசனாட
ஞான சம்பந்தரோடு இந்திரர் பதினெட்டு முனியட்ட பாலகருமாட
நரைதும்பையருகாட நந்திவாகனமாட நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட எனைநாடி இது வேளை விருதோடு
ஆடிவருவாய் ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ்
நடராஜனே

(நடராஜப்பத்து)

இதன்பின் தட்சணா மூர்த்தியை வணங்குதல் வேண்டும்.

கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா றங்க முதல் கற்ற கேள்வி
வல்லார்க் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருத்ததனை யிருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைத்து பவத்
தொடக்கை வெல்வாம்

அதன் பிறகு அறுபத்து மூவரை வழிபட வேண்டும்

அதற்குப் பிறகு சோமாங்கந்தரை வழிபடவும். சோமங்கந்தரை வழிபட்டபின் கருவறையின் பின்னே அமர்ந்திருக்கும் லிங்கோற்பவரை வழிபடவேண்டும் இது அடிமுடிதேடிய புராண வரலாற்றை குறிக்கும்.

இதை தொடர்ந்து வலம் வந்து முருகப் பெருமான் சந்நிதியை அடைந்து வழிபடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறைமதி முகமெனும் ஒளியாலே
தெறிவிழி கணைபுரி திகராலே
உறவு கொள் மடவர்கள் உறவாமோ
உன்திரு வடியினி அருள்வாயே
மறை பயிலரிதிரு மருகோனே
மருவலரசுரர்கள் குலகாலா
குறமகள் தலை மனம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

அதன் பிறகு சனிஸ்வரனை வணங்கி அதன்பின் சண்டேசுரரை வணங்கவேண்டும். சிவன் கோவிலுக்கு சென்று விட்டு சண்டேஸ்வரரை தரிசிக்காமல் வந்தால் பலன் கிடைக்காது சதா நேரமும் ஈஸ்வர தியானத்திலே மூழ்கி இருப்பதனால் நாம் வந்து போவதை கைகொட்டி சந்தம் போட்டு வணங்கவேண்டும்.

அப்படியே தொடர்ந்து வலம் வந்து வைரவரை வணங்க வேண்டும். பின் அதிகார நந்தியிடம் விடைபெற்று, நவக் கிரகங்களையும் வழிபட்டு முடித்துக் கொண்டு அமர்ந்து சற்று நேரம் தியானம் செய்தல் வேண்டும்.

பின்னர் மீண்டும் வலமாக வந்து இறைவனிடம் விடை பெற்றுத் திரும்புதல் வேண்டும். இதுவே திருக்கோயில் சென்று வணங்கும் முறையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்துக்குள் செய்யத் தகாதவைகள்

வெறுங்கையுடன் செல்லுதல்.
ஆலயத்துக்குள் யாரைச் சந்தித்துக் கொண்டாலும் ஒருவருக்கொருவர் வணங்குதல் கூடாது.
ஆலயத்துக்குள் ஒருவருக்கு ஒருவர் விபூதி, சந்தனம், குங்குமம் இடக் கூடாது.
ஆலயத்தில் தரப்படும் விபூதி, சந்தனம், தீர்த்தம் போன்றவற்றை பயபக்தியுடன் வாங்க வேண்டும்.
கர்ப்பக கிருகத்திலுள்ள மூல விக்கிரகத்துக்குத் திரை போட்டிருக்கும் போது வணங்கக் கூடாது.

வீதி வலம் வரும் போது மிக வேகமாகச் செல்வதைத் தவிர்த்து கைகளை நெஞ்சில் அல்லது தலைக்கு மேல் வைத்துக் கொண்டு அடி மேல் அடி வைத்து வர வேண்டும்.

ஆலயத்துக்குள் வீண் பேச்சு பேசுதல் கூடாது, காலணிகளைப் பயன் படுத்தக் கூடாது, எச்சில் துப்புதல், நெட்டி முறித்தல், அசுத்தம் செய்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும். சத்தம் போட்டு உரக்கப் பேசுதல், சண்டையிடுதல், என்பன தவிர்க்கப்பட வேண்டும் அபிஷேகம், நிவேதனம் நடக்கும் போது தரிசனம் செய்யக்கூடாது.

மேலும் மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டு இருத்தல், மயிர் கோதி முடிதல், சூதாடல், பாக்கு வெற்றிலை உண்டல், சிரசிலே வஸ்த்திரம் தரித்துக் கொள்ளுதல். தோளிலே உத்தரியம் இட்டுக் கொள்ளுதல், ஆண்கள் சட்டை இட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல். தூவி, தம்ப பலி பீடம் விக்கிரகம் இவைகளின் நிழலை மிதித்தல், சிரித்தல், விளையாடுதல் சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் முதலியனவையாகும்.

## சிவதரிசனம் செய்யும் காலப் பலன்கள்

கால சந்தியில் தரிசனம் செய்தால் பிணிகள் அனைத்தும் நீங்கும்.
நண்பகலில் தரிசனம் செய்தால் தனம் பெருகும்.
சந்தியா காலத்தில் தரிசனம் செய்தால் பாவங்கள் அனைத்தும் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்த காலத்தில் தரிசனம் செய்தால் வீடு பேறுண்டாகும்.

தினமும் தரிசனம் செய்ய முடியாதவர்கள் சோமவாரம், சுக்கிர வாரம், பிரதோஷம் பௌர்ணிமை, அமவாசை, திருவாதிரை, கார்த் திகை, மாதப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத் திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிலும் ஆயினும் தரிச னம் செய்தல் வேண்டும்.

# ஆலயத்தில் செய்ய வேண்டிய தொண்டுகள்

ஆலயத்தின் அருகில் நந்தவனம் அமைத்தல்

ஆலயத்தில் மண்டபங்களை வீதிகளை கூட்டி, கழுவித் துப்பரவு செய்தல்.

தீபங்கள், கலசங்கள் முதலிய உபகரணங்களை துலக்கி துப்பரவு செய் தல்.

எண்ணையிட்டு தீபங்கள் ஏற்றுதல்.

தீர்வர்த்தி, குடை ஆலவட்டம் முதலியன பிடித்தல்.

சுவாமி காவி வீதிவலம் வருதல் போன்ற காரியத் தொண்டுகளைத் தாமே முன் வந்து செய்தல்.

திருமுறைகளைச் சீராள உச்சரிப்போடும் பண்ணோடும் பாடு தல்.

விஷேஷ காலங்களில் திறமை பெற்றவர்கள் பண்ணிசை பாடுத லும் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தலும் சிறந்த புண்ணிய தொண் டாகும்.

சிவபெருமானுக்கு உகந்த வில்வ பத்திரங்கள். இது மருத்துவ சக்தி வாய்ந்தவை. மும்மூன்றாகத் துளிர்த்திடும் இவ்விலைகள் ஈச னின் முக்கண்ணை குறிக்கின்றன. வில்வத்தினால் அர்ச்சிப்பது மிகவும் விஷேஷமாக கருதப்படுகிறது.

கஸ்டங்கள் மனக்கவலை ஏற்படும் போது, சிவபெருமானை நினைத்து மனமுருகி பின்வரும் பாடலைப் படிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையுடையாய் தோலுடையாய்
வார்சடை மேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கை யினாலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களா மேயவனே.

கிரக நிலை சரி இல்லாமல் இருப்பவர்கள் சிவபெருமானை நினைத்து மனமுருகி கோளாறு பதிக பாடல்களை படித்தால் நன்மை கிடைக்கும்.

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்
தென் உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.
(தொடர்ந்து பதிகம் முழுவதையும் படிக்கவும்)

## செல்வம் பெற சிவபெருமானை நினைத்து மனமுருகி பின்வரும் பாடலைப் பாடவும்.

வாசிதீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே
நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே
காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம்நல்குமே.

## தீராத நோய்கள் தீர சிவபெருமானை நினைந்து மனமுருகி பின்வரும் பாடலைப் பாடவும்.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாரா த செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழுதின் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

## ஆயுள் நீட்டிக்க சிவபெருமானை நினைந்து மனமுருகி பின்வரும் பாடலைப் பாடவும்.

அந்தணாளன் உன்னடைக்கலம் புகுத அவனைக்
காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிர் தனை வவ்வினாய்க்
குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை எமர்தமர் நலியிலிவன்
மற்றென்னடியாள் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன் செழும்
பொழிந்திரு புன்கூர் உளானே.

## கன்னிப் பெண்கள் நல்ல கணவன் பெற தினமும் சிவபெருமானை நினைத்து மனமுருகி பின்வரும் பாடலைப்பாடவும்

நீலங் கொள் மேகத்தின் மயில் மீதே
நீ வந்த வாழ்வைக் கண்(டு) அதனாலே
மால் கொண்ட பேதைக்குன் மணநாளும்
மார் தங்கு தாரைத் தந்(து) அருள்வாயே
வேல் கொண்டு வேலைப்பண்(டு) எறிவோனே
வீரங்கொள் சூரர்க்கு குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார் தட்டும் பெருமானே.

## பதினாறு பேறும் பெறதினமும் சிவபெருமானை நினைத்து மனவுருகி பின்வரும் பாடலைப் பாடவும்.

சகல செல்வங்களும் தரும் இமய கிரிராச
தனயைமா தேவி, நின்னைச்
சத்யமாய் நித்திய முள்ளத்தில் துதிக்குமுத்
தமருக்கு இரங்கி மிகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில மதில் நோயின்மை கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந் தானம் வலி துணிவு வாழ் நாள் வெற்றி
ஆகு நல்லூழ்நு கர்ச்சி
தொகை தரும பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்!
சுகிர்தகுண சாலி' பரிபாலி அநுகூலி! திரி
சூலி மங் களவி சாலி!
மகவு நான், நீதாய் அளிக் கொணாதோ மகிமை
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமீ! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே

**பல வழிகளால் பல துன்பங்கள் வந்து கொண்டு இருக்கும் போது சிவபெருமானை நினைத்து மன வுருகி இப் பாடலை பாடவும்**

''என் செய லாவதி யா தொன்று
வில்லையினித் தெய்வமே
உன் செயலே யென் றுணரப்பெற்
றேனிந்த வூனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று
மில்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோவிங்
ஙனே வந்து மூண்டதுவே

பட்டினத்தார்

**இலங்கை வேந்தர் இராவணன் அறியாமை யினாலே ஆயிரம் குற்றங்கள் செய்ததை நினைத்து மனம் வருந்தி சிவபெருமானின் மேல் இப் பாடலை பாடி விமோசனம் பெற்றார்**

ஓ மகா தேவ சம்போ! ஓ சிவசங்கர தேவா!
ஓ சாம்பவி மனோகார ஓ கைலாச கிரிநாதா
ஓ கமல பொற்பாதா! ஓ பாலலோசனா'
ஓ பரமதயாளா, ஓ அரகர சிவனே!
ஓ அருள் தருபரனே! ஓ ரிஷபவாகனா
ஓ நின்மல சொருபா, ஓ சந்திர சேகரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ சடாதாரதற்பரா! ஓ முப்புர தகனா!
ஓ முனிவர்கள் வந்திதா! ஓ நாதன் மறைக கெட்டா நாதாந்த சோதி!
ஓ சுந்த நிர்மலனே! ஓ சுபாள் கர வெளியே
ஓ மேருவில்லுடையாய்! ஓ விளங்கு திரி சூலா
ஓ மாள் மழு வேந்தி ஓ வானவர் பூஜிதா?
ஓ பார்வதி சமேதா! ஓ பக்தர்கள் சகாயா?
ஓ விரிஞ்சனுங் காணா வெள்விடைக்கதிபா?
ஓ பஞ்சாட்சரனே! ஓ பரவெளி சிவனே!
ஓ தந்தி முகத்தனைத் தந்தருள் மூலா!
ஓ சரவணபவனைத் தாங்கிய சீலா
சரணம், சரணம், சங்கார சரணம்
தருண மறிந்தெனைத் தாங்குவாய் சரணம்
அந்தா சரணம் அமலாசரணம்,
நித்தா சரணம் நிறைவே சரணம்
போற்றி போற்றி புண்ணிய மறையோய்
போற்றி போற்றி புங்கவர்க் கிறையோய்
போற்றி போற்றி யென் புன்மதி தவிர்த்தோய்!

இப்பாடலை தினமும் படித்தால் தெரிந்தும் தெரியாமல் செய்த பிழைகளை சிவபெருமான் பொறுத்து அருள்வார்

# இறைவனை நினைத்திரு.

எந்த வேளையும் இறைவனை நினைக்க வேண்டும். அது ஆரம்பத்தில் முடியா விட்டாலும், மூன்றுவேளைகளில் தவறாமல் நினைக்கவும்.

காலை எழுந்தவுடன் இறைவனே இன்று நல்வழியில் நிற்க அருள் புரி என்று தொழுங்கள்.

உணவு உட்கொள்ளும் பொழுது, இறைவனே இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள்புரி என்று தொழுங்கள்.

இரவில் படுக்கப் போகும் போது இறைவனே இந்த உறக்கத்திலே உன் எண்ணமே நிற்க அருள்புரி என்று தொழுங்கள்.

**வாரியார் பொன் மொழிகள்**

தான் என்ற அகம் அழிய வேண்டும். கர்வமும் திமிரும் அழிய வேண்டும். அதற்கு இறைவன் திருவடி ஒன்றையே தேடிச் சரணடைய வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்னும் அகங்காரம் அழியும் போது கடவுள் தோன்றுகிறர்

சரணாகதி பூரணமாக உள்ள இடத்தில் நான், எனது என்ற உணர்வு இருக்காது.

நான், எனது என்று ஓயாமல் புலம்புகிறாயே முதலில் நீ உனக்கு சொந்தமா என்று யோசித்து பார், ஆராய்ந்து பார்த்தால் நான் என்ற அகந்தை அழியும். மனதில் ஒளி தோன்றி நிறைவு ஏற்படும் ஆண்டவன் நினைவு பெற்று நற்கதி அடைவாய்.

## பிரதோஷம்

வளர்பிறையில் திரயோதசியன்றும் தேய்பிறையில் திரயோதசியன்றும் மாலை நாலரை மணி முதல் ஆறு மணி நாழிபத்தைந்து நிமிடம் வரை உள்ள காலம் பிரதோஷ காலமாகும். இது கடும் தோஷமான நேரமாகும் இந் நேரத்தில் தவறுகளையும் செய்ய தூண்டும் ஆகவே இந் நேரத்தில் சிவனை வழிபட வேண்டும். இது சிவபெருமானுக்கு விசேஷமான நாளாகும். இறைவன் நந்தியின் இரு கொம்புகளுக்கு நடுவில் நின்று நடனம் செய்து தரிசனம் அருளும் புண்ணிய காலமாக கருதப்படுகிறது. சனிக்கிழமையில் கிருஷ்ண பஷ திரயோதசியிரில் வந்தால் அது சனி பிரதோஷம் எனப்படும். இது பெரிய குற்றங்களை செய்ய கூடிய நேரம் இந் நேரம் சிவதரிசனம் செய்தால் குற்றங்களிலிருந்து நீங்கலாம்.

பிரதோஷ வேளையில் சுவாமி அபிஷேக ஜலம் விழும் நீர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் வலமாகவும், இடமாகவும் மாறி மாறிச் சிவாலயத்தை வலம் வருவது மரபு.

பிரதோஷ வழிபாடு செய்தால் துன்பப்படுத்தும் வறுமை, பயம் பாவம், மரண வேதனை இவை எல்லாம் ஒழிந்து விடும் அன்று பட்டினி யிருப்பதும் மௌனத்தை கடைப்பிடிப்பதும் நன்று.

## கௌரி விரதம்

புரட்டாசி மாதம் பூர்வபட்சம் அஷ்டமியில் இந்த விரதம் தொடங் கப்பட வேண்டும். நிறைகுடம் வைத்து அதில் சிவபெருமானை ஆவா கனம் செய்து இருபத்தொரு இழையுடைய நூலை கையினாற் புனைந்து அர்ச்சனை செய்து தூபதீப நிவேதனம் புரிந்து வழிபட வேண்டும். ஐப்பசிமாத அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசியன்று அதிகாலை யில் எழுந்து நீராடி தூய ஆடை உடுத்து, சிவபெருமானை தூய தீப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவேதனங்கள் செய்து வழிபட வேண்டும். மறு நாள் அமாவாசையன்று காப்பை அவிழ்ந்து விட்டு உணவருந்த வேண்டும். இதுவே கௌரி விரதமாகும்

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கிச் சிவபெருமானை மட்டும் வலம் வந்து வழிபட்டபடியால், உமாதேவியார் வெகுண்டு இறைவனின் இடப்பாகம் பெறும் பொருட்டு திருக்கயிலாயமலையிலிருந்து நீங்கி கௌதம முனிவருடைய வனத்தை அடைந்தார். கௌதமர் கௌரியைத் தொழுது துதித்தார். இந்த விரத்தை கௌதமர் கூற, உமாதேவியார் விதிப்படி விரதத்தை இருந்து இறைவனுடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

## சிவராத்திரி

மாசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்ச சதுர்தசி நாள் சிவராத்திரி நன் நாளாகும். அன்று நள்ளிரவின் பின் முன்றே முக்கால் நாழிகை ''லிங் கோற்பவ காலம்'' என்று சிறப்பாகக் கூறப்படுகிறது. இக்கால கட்டமே சிவராத்திரி விரதத்தின் மிகவும் முக்கியமான நேரம். சிவராத்தி விரதம் மேற் கொள்பவர்கள், நீராடி சிவசந்நிதியில் சிவபூசையை மேற் கொள்ளுவது சிறந்தது. அவ்விதம் சிவபூசை மேற் கொண்டு பூசையைச் செய்து முடிக்க முடியாதவர்கள், கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் பூசையைக் கண்டுகளிக்கலாம். அன்று முழுவதும் உப வாசம் இருக்க வேண்டும். பகலில் உறங்க கூடாது. இரவில் நான்கு காலங்களிலும் நடக்கும் பூசைகளில் கலந்து கொள்ள வேண்டும். இரவு முழுவதும் வேதபாராயணம் செய்ய வேண்டும். வேதம் ஓதத் தெரியாதவர்கள், தேவாரம் திருவாசகம் போன்றவற்றை ஓதலாம். பூசையுடன் சேர்ந்து இசையால் இறைவனை வழிபடலாம். சிவபெரு மானின் பெருமைகளைக் கூறும் நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். சிவராத்திரி நாளன்று முற்றிலும். உபவாசம் இருப்பதுதான் நல்லது. அதுமுடியாத வர்கள் முதல் ஜாமம்வரையிலாவது உபவாசம் இருந்து விட்டு, விர தத்தைமுடிக்க வேண்டும். விரத சமயத்தில் பாலும், நீரும், பழமுமே உண்பதற்கு உகந்தவை.

சிவராத்திரி முடிந்த மறுதினம் மகேஸ்வர பூசை தினமாகும். அன்று பாரணை எனப்படும் உபவாசத்திற்குப் பிறகு உட்கொள்ளும் முதல் உணவை - சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்த பிர சாதத்தை உட்கொள்ள வேண்டும். பகல் பொழுதில் சிவபுராணங் களைப் படிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம்

*சிவலிங்கம் சிவபெருமானைக் காணுவதற்குரிய அடையாளம். லிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாக இருக்கும். அது பிரம்ம பாகம் நடுப் பாகம் எண் கோணமாக இருக்கும். இது ஆவுடை என்ற பீடத்துக்குள் அமைந்திருக்கும் இது விஷ்ணு பாகம், மேற்பாகம் ருத்ர பாகம், இதுவே சிவலிங்கத்தின் தனிச் சிறப்பு ஆகும். சிவபெருமானது நுட்பமான வடிவமே சிவலிங்கமாகும்.*

# நடராசா

*சிவபெருமானது சிறந்த மூர்த்தங்களுள் ஒன்று நடராசர் வடிவம். இது ஐந்தொழிலைக் குறிக்கும். ஆனந்த தாண்டவ வடிவமாகும். இடது பாதம் தூக்கி வலது பாதம் ஊன்றி நிற்கிறார். இவர் தீயை கையில் ஏந்தி வைத்து இருப்பது சத்தியம் என்ற பொருள். அதாவது தன்னை நம்பி வந்தால் யம பயமில்லை என கூறப்படுகிறது.*

# சோமாஸ்கந்தர்

*நடுவில் பால முருகனும், இருபுறமும் சிவனும் உமையுமாக அமர்ந்து இருக்கும் திருக்கோலமாகும்.*

# சண்டிகேஸ்வரர்

சண்டிகேஸ்வரர் ஒரு மாடு மேய்ப்பவருக்கு மகனாகப் பிறந்தவர். தந்தையின் உத்தரவுப்படி தினமும் மாடுகளை மேய்த்து வந்தார் சின்ன வயதிலேயே அவருக்கு சிவபெருமானின் மீது பக்தி, பற்று ஏற்பட்டது. ஆனால் அவர் சிவன் ஆலயத்திற்கு செல்ல முடியாத சூழ்நிலை. அதன் காரணமாக அவர் மண்ணால் சிவலிங்கம் பிடித்து வைத்து பூசை செய்து வந்தார் பின் அச் சிவலிங்கத்துக்கு பாலபிஷேகம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட ஒரு கறவைப் பசு மாட்டை சிவலிங்கத்தக்க அருகில் கொண்டு சென்று மடிகாம்பைப் பிடித்து இழுத்து சிவலிங்கததின் மேல் பால் விழச்செய்து அபிஷேகம் செய்தார். பாலபிஷேகம் தொடர்ந்து நடந்தது. பால் குறைகிறது என்ற காரணத்தை அறிய விரும்பி மகன் மாடு மேய்க்கும் இடத்துக்கு சென்றார் தகப்பன். அவர் மகனின் செய்கையைக் கண்டு கோபப்பட்டு. மகன் பிடித்து வைத்திருந்த மண்ணாலான சிவலிங்கத்தைக் காலால் எட்டி உதைத்துக் கலைத்தார்; சண்டிகேஸ்வரருக்கு இச் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தை ஏற்படுத்த அவர் தந்தை யென்றும் பார்க்காமல அவரின் காலை வெட்டி துண்டாக்கினார்.

சிவபெருமான் சண்டிகேஸ்வரனின் பத்தியை மெச்சி அவருக்கு காட்சி கொடுத்து அவரை சிவாலயங்களில் அமர வைத்தார். சண்டிகேஸ்வரர் சிவபெருமானின் காவல் தெய்வம். சிவாலயத்துக்கு சென றால் இறுதியாக சண்டிகேஸ்வரரை கைகொட்டி வணங்கிவர வேண்டும்.

## அசையாமணி

ஆலயங்களிலுள்ள கண்டாமணி எனப்படும் அசையாமணி அடிக்கும் போது பல்வேறு கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இறைவனை நினைவூட்டுகிறது. மேலும் இதற்கு தேவர்களை அழைக்கும் சத்தியும் இருப்பதாக மெய்கண்ட சாத்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

## சிவபெருமானின் ஐந்துலிங்கம் இருக்கும் இடம்

அப்புலிங்கம் - ஐம்புகேசுவரம் (திருவானைக்கா)
தேயுலிங்கம் - திருவண்ணாமலை
வாயுலிங்கம் - திருக்காளத்தி
பருத்லிங்கம் - காஞ்சிபுரம்
ஆகாயலிங்கம் - சிதம்பரம்.

## முத்தி தரும் ஏழு தலங்கள்.

(1) அயோத்தி (2) மதுரை (3) மாயை (4) காசி (5 காஞ்சி (6, அவந்தி (7) துவாரகாபதி

## பஞ்சலிங்கம்

(1) வரலிங்கம் (2) முத்திலிங்கம் (3) மோட்சலிங்கம் (4) போகலிங்கம் (5) யோகலிங்கம், என்பன ஆகும்.

## பஞ்ச மூர்த்தி

விநாயகர், சுப்பிரமணியர், பரமசிவன், பார்வதி சண்டிகேஸ்வரர் என்பன ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org